சேர்ந்தவர்களை ஆதரித்து அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பெங்களூரிலே அங்கே வெளியிடப்பட்டிருக்கிற தேர்தல் பிரகடனத்தின் அடிப்படையிலே வாக்குகள் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஸ்டேட் அட்டானமி என்று நாங்கள் சொன்னால் தவறு, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னால் தவறில்லை. வேண்டுமானால் நாங்கள் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறோம், மாநில சுயாட்சி வேண்டுமென்று காமராஜர் கேட்டால், கிரேட்டர் அட்டானமி வேண்டுமென்று வீரேந்திர பாட்டீல் கேட்டாரே அதே வாசகத்தையே காமராஜர் கேட்டால், நாங்கள் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறோம், வீரேந்திர பாட்டீல் கேட்கிற வாசகத்தை காமராஜ் அவர்கள் கேட்டால் அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்துக் கூட நிற்கிறோம். கிரேட்டர் அட்டானமி வேண்டுமென்று சொல்கிற துணிவு காமராஜருக்கு இருக்கிறதா? வீரேந்திரபாட்டீல் சொல்கிற கிரேட்டர் அட்டானமி வேண்டுமென்று சொல்கிற அளவுக்குத் துணிவு அனந்தநாயகி அம்மையாருக்கு இருக்கிறது? அப்படிச் சொன்னால் அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்து நிற்கத் தயாராக இருக்கிறோம்.

இதுவரையிலும் இந்த விவாதத்திலே கருத்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நேரம் அதிகமாகிவிட்டதால் இதற்கு மேலே மற்ற மற்ற பிரச்னைகளை எல்லாம் அந்த அந்த மானியங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றபோது விவாதித்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இன்று இந்த அளவில் முடிவடைந்து பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

4. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

54. Notification issued with Roc. No. 29691--70-E5, dated the 24th December 1970, in regard to extension of section 286 and relevant provisions relating to vital statistics under the Tamil Nadu

District Municipalities Act, 1920, within the jurisdiction of the Porto Novo Town Panchayat of South Arcot district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

55. Notification issued with G.O. Ms. No. 3862, Public (Services-A), dated the 30th December 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for exclusion of the post of Gazetted Manager, Childrens' Theatre, Madras, in the office of the Director of Information and Publicity from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

B. *Reports, Notifications and Other Papers.*

57. Erratum issued with Roc. No. 208985/69-E5, dated the 16th August 1970, to the notification published at page 123 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th **May 1957.**

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS